முச்சந்தி முரளி



"அப்ப நாட்டில உள்ள எல்லாக் கள்ளரும் தங்களையும் அரசாங்கம் தான் காப்பாத்த வேணும் எண்டுவினம் போல"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39

கதிர் : 330

திங்கட்கிழமை

21 ஒக்ரோபர் 2024

ஐப்பசி 04 ஆம் நாள்

வள்ளுவர் ஆண்டு 2055



## மஹிந்தவைக் காப்பது அரசாங்கத்தின் கடமை

கொழும்பு, ஒக். 21

நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு புலிப் பயங்கரவாதிகள், முயற்சித்துவந்த சூழ்நிலையில், போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்த ராஜபக்சவை பாதுகாக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும்.

11



# 8 அரச வாகனங்களை ஒப்படைத்தார் மஹிந்த

**கொழும்பு, ஒக்ரோபர் 21**

**முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் வசமிருந்த 8 அரச வாகனங்கள் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும் 8 வாகனங்கள் மஹிந்த ராஜபக்சவின் வசம் இருப்பதாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.**

11

## 'யாழ்தேவி' இன்று ஓடாது

கொழும்பு, ஒக். 21

வடக்கு ரயில் மார்க்கத்தின் சேவைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் எனவும் முதற்கட்டமாக யாழ்தேவி ரயில் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்ட போதும் அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - கோட்டையிலிருந்து மஹவ வரை மாத்திரமே தற்போது ரயில் சேவை முன்னெடுக்கப்படுகிறது.

இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் மணித்தியாலத்துக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் ரயில்கள் பயணிக்கக்

11

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியது நானே தான்!

### உரிமை கோருகின்றார் கருணா

மட்டக்களப்பு, ஒக். 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நான்தான் உருவாக்கினேன். தலைவரிடம் விடயத்தை எடுத்துக் கூறி கூட்டமைப்பை உருவாக்கவேண்டும் என்று முடிவெடுத்து அதனை உருவாக்கினேன். மட்டக்களப்பில் இருந்து உருவாகிய கருதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என மட்டக்களப்பு மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.

11

## அரியநேந்திரன் மீது சட்டநடவடிக்கை!!

கொழும்பு, ஒக். 21

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வருமானம் மற்றும் செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்காத அரியநேந்திரன் உள்ளிட்ட மூன்று வேட்பாளர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள்

11



## தேசியத்தில் சாதித்த அருணோதயா

யாழ்ப்பாணம், ஒக். 21

பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட விளையாட்டுப்போட்டியில், கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் இரு மாணவிகள் தங்கம், வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுச் சாதித்துள்ளனர்.

11

## உருவாகிறது 'டானா' புயல்

யாழ்ப்பாணம், ஒக். 21

வங்கக்கடலில் நாளை மறுதினம் புதன்கிழமை புயல் உருவாக இருப்பதாகவும், அந்தப் புயலுக்கு 'டானா' எனப் பெயரிடப்பட்டுள்ளது எனவும் இந்திய

11

### தெல்லிப்பழையில்

## பற்றைக்குள் சொகுசுக் கார்



யாழ்ப்பாணம், ஒக். 21

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலையில் ஆள்நடமாட்டமற்ற பற்றைக்குள் அதிசொகுசுக் கார் ஒன்று அநாதரவாக நின்ற நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி அவர்கள் அதிசொகுசுக் காரை மீட்டதோடு காரின் இலக்கத்தகடுகள் அடையாளப்படுத்தப்பட்ட தகவல்கள் அனைத்தும் போலியானவை

11

## புதிய அமைச்சரவையில் இனி 25 அமைச்சர்களே

கொழும்பு, ஒக்.21

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை 25 உறுப்பினர்களுக்கு மட்டுப்படுத்தப்படும் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

11

## வடக்கில் மழை

கொழும்பு, ஒக். 21

யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இன்று மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (அ-ஒ-இ)

### கனடாவில் துப்பாக்கிச்சூடு;

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் குடும்பத்தலைவர் சாவு!

ஒன்ராறியோ, ஒக். 21

கனடாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம்குடும்பத் தலைவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், மயிலிட்டியைச் சொந்த இடமாகவும் மார்க்கம், ஒன்ராறியோ, கனடாவில் வசித்து வந்தவருமான



11

## ஓட்டோ மோதி மூதாட்டி பலி!

யாழ்ப்பாணம், ஒக். 21

இருபாலை - கட்டப்பிராயில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை முச்சக்கர வண்டி மோதியதில் குகபாலச்சந்திரன் சின்னத்தங்கச்சி என்ற 68 வயதுடைய பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# கால அவகாசம் நிறைவு அறிக்கைகள் இன்று

## எவராலும் தடுக்கமுடியாது; உதய கம்மன்பில அறிவிப்பு

**கொழும்பு, ஒக்.21**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் இரு விசாரணை அறிக்கைகளையும் தான் நாளை (இன்று) வெளியிடவுள்ளதாக பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில நேற்று மீண்டும் அறிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் கூறியதாவது:

தன்னைக் கைது செய்து சிறை வைத்தால் கூட, ஏ.ஐ. தொழில்நுட்பம் உட்பட நவீன தொழில்நுட்பம் ஊடாக அறிக்கைகளை வெளியிடுவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதியால் வெளியிடப்படாமல் இருக்கும் இரு அறிக்கைகளையும் வெளியிடுவதற்கு ஜனாதிபதிக்கு நான் வழங்கி இருந்த கால அவகாசம் நாளை (இன்று) காலை 10 மணியுடன் நிறைவடைகின்றது. அவர் அறிக்கைகளை வெளியிடாவிட்டால் அவற்றை நிச்சயம் நான் வெளியிடுவேன்.

அறிக்கைகளை வெளியிடுவது தொடர்பில் எனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. கைதுசெய்யப்படுவது பற்றியும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அரச இரகசிய சட்டத்தின்கீழ் 14 வருடங்கள் வரை கூட சிறைத் தண்டனை விதிக்கக்கூடும். எனினும், மக்களின் தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக நான் அந்தச் சவாலை ஏற்கின்றேன்.

சிலவேளை என்னைக் கைதுசெய்தால் கூட, பாகிஸ்தானில் சிறைச்சாலையில் இருந்து ஏ.ஐ. தொழில்நுட்பம் ஊடாக இம்ரான் தேர்தலை வழிநடத்தியது போல, நவீன தொழில்நுட்பம் ஊடாக அறிக்கைகளை நான் வெளியிடுவேன். சிறைவைக்கப்பட்டால்கூட அறிக்கை எப்படியும் வெளிவரும். அதனை எவராலும் தடுக்க முடியாது- என்றார். (ச-44)

# களத்தில் மஹிந்த



கொழும்பு,ஒக்.21

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வெகுவிரைவில் தனது அரசியல் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்க உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன பெற்ற படுதோல்வியை அடுத்து அந்தக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச அரசியலில் இருந்து தற்காலிகமாக ஒதுங்கிக் கொள்ளவுள்ளதாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடும் பொதுஜன பெரமுனவின் வாக்குவங்கியை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில், மஹிந்த ராஜபக்ச மீண்டும் களத்தில் இறங்கியுள்ளார்.

பொதுத்தேர்தலின் பின்னர் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் செயற்பாடுகளுக்கும் மஹிந்த ராஜபக்ச தனது பங்களிப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## 500 ஐ நெருங்கும் தேர்தல் முறைப்பாடுகள்

கொழும்பு,ஒக்.21

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தல் தொடர்பாக இதுவரை 401 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் 53 முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில், இதுவரை கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 401 ஆக அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு : 14.11.1956 உதிர்வு : 21.10.2018

அமரர் பேரின்பநாதன் சாரதாதேவி (லலி) வேலணை

காலத்தால் அழியாத அகல் விளக்கு

ஆறு ஆண்டுகள் கடந்தும்
மீண்டு ஏழ முடியாத இழப்பு

பெற்றவள் உறங்குகிறாள் என்று
மனம் சாந்தி கொள்ளவும் முடியவில்லை
தட்டி கொடுக்க எம் ஆசான்
இல்லையே என்று தனித்து நகரவும் முடியவில்லை
கட்டி அணைத்து அழுதிட எங்கள்
அம்மாவும் கூடவே இல்லையே...

எந் நாளும் அம்மா என்ற நினைவு
இல்லாமல் விடியலும் வந்ததில்லை
அம்மாவின் ஏக்கங்கள் எம்மை
தூண்டாமல் நாம் உறக்கம் கொண்டதுமில்லை

அம்மா....
எங்கள் வாழ்வை துணிந்து வாழ பழக்கி விட்டீர்கள் ஆனால்
நீகள் இல்லாமல் எப்படி வாழ்வது
என்பது மட்டும் பழக்க மறந்து
எங்கு சென்றீர்கள் அம்மா...

இன்றும் என்றும் உங்கள் பெயர்
சொல்லியே வாழ்க்கை நகருகின்றது அம்மா....
வலியின் பிள்ளைகள் என்பது தான்
எமது மிகப் பெரிய அடையாளமே...

தொட்டு விட முடியாத தூரத்தில் நீங்கள்
எட்ட முடியாத துயரத்தில் நாங்களும்
தவிர்ப்பது நாம் மட்டுமே உணர்ந்த ஒன்று

காலம் பதில் சொல்லும் என்பார்கள்
காலத்தால் கூட சொல்ல முடியாத
பிரிவை தந்தது யார் அம்மா.....

கலங்கி நிற்கும் உறவுகளுக்கு
கண்ணீர் மட்டுமே ஆறுதல்....
காணத் துடிக்கும் கண்களுக்கு
கனவு மட்டுமே ஆறுதல்

அம்மா என்ற கூட்டுக்குள் வாழ்ந்த
பிள்ளைகளை அரவணைத்து மீண்டும்
ஒரு முறை வந்திடுங்கள்.... அம்மா!!!

தாய் மடிக்கு ஏங்கும் பிள்ளைகள்
பிரசாந்தன் (யாழ்), துசிக்கா (கனடா), நுசாந்தன் (சுவீடன்)

(CR 1670) V-1

# ரணில் கேட்ட சலுகை அரசாங்கம் நிராகரிப்பு

கொழும்பு,ஒக்.21

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரி 16 சமையல்காரர்கள், 163 பாதுகாப்புப் பணியாளர்கள், 20க்கும் மேற்பட்ட வாகனங்கள் அடங்கிய விரிவான சலுகைகளை நிராகரித்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்க விதிமுறைகளுக்கு இணங்க விக்கிரமசிங்க வுக்கு மூன்று வாகனங்கள் மாத்திரமே வழங்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பொது நிதி மூலம் ஆதரவளிக்கப்படுவதை தடுக்க அரசாங்கம் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தும்.

அத்துடன், பொதுமக்களின் பணத்தில் தனிப்பட்டவர்கள் சுகபோகங்கள் அனுபவிப்பதை ஏற்கமுடியாது அவர்களுக்குப் பாதுகாப்பு பிரச்சினை இருந்தால், அதனை அரசாங்கம் உரிய முறையில் நிவர்த்தி செய்யும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களிலிருந்து மாற்றம் தொடங்கட்டும்

## மிதிலைச்செல்வி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம் , ஒக். 21**

**மாற்றம் என்பது பெண்களில் இருந்து ஆரம்பிக்கப்படவேண்டும். பெண்களில் மாற்றம் இல்லாது சமூகத்தில் மாற்றம் ஏற்படாது. சமூகத்தில் மாற்றம் இல்லாது எதனையும் செய்ய முடியாது.**

-இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் தமிழரசு கட்சியின் முன்னாள் கொழும்புக்கிளை செயலாளரும், தமிழ் மக்கள் கூட்டணியில் தற்போது போட்டியிடுபவருமான மிதிலைச் செல்வி ஸ்ரீ பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வீட்டில் இருக்கும் பெண்களின் உழைப்பு மொத்த உற்பத்தியில் பங்களிக்கப்படுகிறது. ஆனால் சமூகம் பெண்கள் வீட்டில் சும்மா இருக்கிறார்கள் என்கின்றது.

எனவே பெண்கள் ஏதேனும் தொழில் முயற்சிகளை செய்யவேண்டும். அதன் மூலம் வருமானங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பெண்களில் இருந்து மாற்றம் வர வேண்டும் என்பதே எனது இலக்கு- என்றார். (ச-20)





## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். போதனா மருத்துவமனை மற்றும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் வேண்டுகோளுக்கு அமைய நெல்லியடி பொலிஸார், கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தினர் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் கரவெட்டி மூத்த விநாயகர் ஆலய விழா மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

ஸ்டெம் செல் மூல உயிரணு தானம் வழங்குதலின் விழிப்புணர்வை மருத்துவர் நிர்மலா பொன்சேகா , யாழ். போதனா மருத்துவமனை இரத்த வங்கி மருத்துவர் நிதர்சினி பாலசிங்கம் ஆகியோர் வழங்கினர். இரத்தான முகாமில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் கொலின்ஸ் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் குருதிக்கொடையளித்தனர். (ரி-100)

## ஆசியக்குழு வருகை

கொழும்பு,ஒக். 21

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்காக ஆசியத் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் முதலாவது குழு எதிர்வரும் 25ஆம் திகதி நாட்டுக்கு வரவுள்ளது.

அந்த அமைப்பைச் சேர்ந்த 30 கண்காணிப்பாளர்கள் பொதுத் தேர்தலைக் கண்காணிக்கவுள்ளனர். (ச-இ)

## சலுகைகளைப் பறிக்கவில்லை

### அரசு தெளிவுபடுத்தல்

கொழும்பு,ஒக். 21

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ சலுகைகள் எதுவும் மீளப்பெறப்படவில்லை என அரசாங்க தகவல் திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது. 1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜனாதிபதியின் உரிமைச் சட்டத்தின் விதிகளின்படி முன்னாள் ஜனாதிபதிகளுக்குச் சலுகைகள் மற்றும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ச மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரிடமும் மேலதிக வாகனங்களை மீள ஒப்படைக்குமாறே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெளிவுபடுத்தியுள்ளது. (ச)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## கூட்டுறவாளர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.21
கோண்டாவில் பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய 102 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.
விழாவில் அங்கத்தவர்கள், பணியாளர்கள் போன்றோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து கூட்டுறவாளர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (ரி-17)

## உதவிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக்.21
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் முதியோர் தின நிகழ்வை முன்னிட்டுப் பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேச செயலகங்களின் கோரிக்கைக்கு அமைவாக 87, 500 ரூபா பெறுமதியான 35 புதிய படுக்கை விரிப்புகள் மற்றும் 35 புதிய உடுபுடைவைகள் சந்நிதியான் ஆச்சிரமநிர்வாகத்தினரால் வழங்கி வைக்கப்பட்டன. (ரி-66)



## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.21
யாழ். அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நவீன கட்டடத் திறப்பு விழா சங்கத் தலைவர் சி. தவச்செல்வன் தலைமையில் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக யாழ். மாவட்டக்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.கி.சந்திரசேகரம் கலந்துகொள்ளவுள்ளார். (ச-45-63)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். கருத்துவேறுபாடு நீங்கும். செலவு செய்ய நேரிடும். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும். யோகம் உண்டாகக்கூடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவு ரையை ஏற்றுக்கொள்வார்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வேலை விடயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும் என்பதால், வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**துலாம்:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். கொடுத்த கடன் திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்ப தற்கு உகந்த நாள்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும். பாதிப்பு எதுவும் இருக்காது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும்

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளைநிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.



## மரக்கறிகள் விலையுயர்வு

யாழ்ப்பாணம், ஒக்.21
யாழ். குடாநாட்டில் மழையையடுத்து மரக்கறி வகைகளின் விலை நாளுக்கு நாள் எகிறி வருகின்றன.
திருநெல்வேலிச் சந்தையில், பாவற்காய், பயிற்றங்காய் போன்றவற்றின் விலை கிலோ 350 ரூபாவாகவும், கத்தரிக்காயின் விலை கிலோ 200 ரூபாவாகவும், மரவள்ளிக் கிழங்கு கிலோ 300ரூபாவாகவும், பச்சைமிளகாய் கிலோ 350ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.
ஏனைய மரக்கறி வகைகளின் விலையும் அதிகரிக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர். (ரி-17)



## யாழ். ஊடக அமையத்தில் நிமலராஜன் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக்.21
யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்ட நிமலராஜனின் 24ஆம் ஆண்டு நினைவுதின நினைவேந்தல் நிகழ்வு யாழ். ஊடக அமையத்தில், அமையத்தின் தலைவர் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் நிமலராஜனின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, பொதுச்சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-45-20)



## துஷ்பிரயோகத் தடுப்புப்பிரிவு சாவகச்சேரியில் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.21
சிறுவர் , மகளிர் துஷ்பிரயோகத் தடுப்புப் பணியகம் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய கலந்துகொண்டு பணியகத்தை திறந்து வைத்தார். (ச-45-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திசைகாட்டியின் பயணம் எது?

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடன்களை வாரிக் குவிக்கின்றது என்று குற்றஞ்சாட்டியிருக்கின்றார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஹர்ஷ டி சில்வா. நாட்டின் கடன்களை அடைப்பதற்கு வாராவாரம் புதிதாகக் கடன்வாங்க வேண்டிய யதார்த்த நிலையை அநுர அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது என்றும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். இலங்கையின் அரசியல் பரப்பில் இவ்வாறான குற்றச்சாட்டுகள் பொதுவானவை என்றபோதிலும், ஹர்ஷ டி சில்வா முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் பத்துடன் பதினொன்றாகக் கடந்துவிடும் விடயமல்ல. இலங்கையின் ஆகச் சிறந்த பொருளியல் நிபுணர்களில் ஹர்ஷவும் ஒருவர். அத்துடன், நாடாளுமன்றத்தின்நிதி அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பிரதான குழுவான, கோப் குழுவின் முன்னாள் தலைவர் என்ற ரீதியில் அவரின் கருத்துகள் தேசிய ரீதியில் மதிப்பு மிக்கவை. அத்துடன், தனித்தும் - கூர்ந்தும் நோக்கப்பட வேண்டியவை.

கடன்களைப் பெற்றும், நாணயத் தாள்களை அச்சிட்டுக் குவித்தும், திறைசேரியின் இருப்பை உறுதிப்படுத்தக்கூடாது. இவ்வாறான நடைமுறையின் கீழ் பேணப்படும் மிகைநிதி சாபக்கேடானது என்பதை கடந்த காலங்களில் தன் முழுநேர அரசியலாக வலியுறுத்தி வந்தவர் ஜனாதிபதி அநுரகுமார. 'பாரம்பரிய அரசியலுக்கும், பாரம்பரிய பொருளாதாரக் கொள்கைக்கும் எதிரான மாற்றம்' என்பதுதான் கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலான காலப்பகுதியில் அநுரவின் அரசியலாகவும் முழக்கமாகவும் இருந்தது. அத்தகைய மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்றுதான் அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிப்பீடத்திலும் ஏற்றப்பட்டார். இவ்வாறிருக்கையில் மக்கள் எத்தகைய மாற்றத்தை எதிர்பார்த்து அநுரவை ஆட்சியில் அமர்த்தினார்களோ, அதிலிருந்து நேரெதிர்ப் பாதையில் பயணிப்ப தென்பது அபத்தம் என்பது மட்டுமல்லாது மன் னிக்க முடியாத குற்றமுமாகும்.

ஊழலுக்கு எதிராக அநுர சில மாற்றங்களைக் கொண்வந்துள்ளார் என்பதையோ, சில நிர்வாகத் திருத்தங்கள் மெச்சும்படியாக செய்யப்பட்டுள்ளன என்பதையோ மறுத்துரைப்பதற்கில்லை. ஆனால், இவை எல்லாவற்றையும் விட நாட்டின் பெரும் பிரச்சினையான டொலரின் இருப்பைப் பேணுவதில் அநுர எத்தகைய மாற்றத்தைச் சாத்தியப்படுத்தியிருக்கின்றார் என்ற கேள்விக்குரிய தெளிவுபடுத்தலை அவர் உடனடியாக முன்வைத்தே ஆக வேண்டும். முன்னாள் ஜனாதிபதிகளுடைய காலத்திலும், அமைச்சரவைகளுடைய காலத்திலும் ஊழலும் மோசடிகளும் இடம்பெற்றனதான். அதை உய்த்துணர்ந்ததால்தான் புலிப் பூச்சாண்டிகள், ஈஸ்டர் தாக்குதல் விவகாரங்கள் என்பவற்றையெல்லாம்தாண்டி மக்கள் அதிகாரத்தை அநுரவிடம் கையளித்திருக்கின்றனர். அநுரவை ஆட்சியில் ஏற்றியமைக்குக்காரணமே, கடந்த அரசாங்கங்களின் குறளிவித்தைகள் தொடர்பில் மக்கள் ஆழமாகத் தெளிவுற்றதால்தான். எனவே, மீண்டும் மீண்டும் வாகனக் குறைப்புகள், ஊழல் மோசடிகள், விசாரணைகள், தனிக்குழுக்கள் என்ற புராணங்களைப் பாடிக்கொண்டிருக்காது, தனது அரசாங்கத்தின் பயணப்பாதையை - செல்நெறியை அநுர தீர்க்கமாக்கவேண்டும். இலங்கையர்களின் எதிர்பார்ப்பும் அதுவே. ஒருவேளை கடன்பெற்றுத்தான் அநுரவின் நாட்களும் நகரப்போகின்றன என்றால், அவர் தனது அரசியலின் இறுதிக் காலத்தில் இருக்கின்றார் என்று அர்த்தம்.




# உள்ளூராட்சித் தேர்தல் பழைய வேட்புமனுப்படியே

## ஆணைக்குழு அறிவிப்பு

**கொழும்பு,ஒக்.21**

**எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு புதிய வேட்புமனுக்கள் கோரப்படமாட்டாது. முன்னர் கோரப்பட்ட வேட்புமனுக்களின் பிரகாரம் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

கண்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்தினால் அநீதி ஏற்படும் என கருதும் எந்தவொரு தரப்பினரும் நீதிமன்றத்தின் உதவியை நாடுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. தேர்தல்கள் ஆணைக்குழு தனது பங்களிப்பை முழுமையாக புரிந்து கொண்டு இலங்கை மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காக செயற்படவுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலுக்கு இடையே முன்னதாக தீர்மானிக்கப்பட்ட எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தல் எதிர்வரும் 26ஆம் திகதி நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# இத்தாலி விபத்தில் இலங்கையர் சாவு

கொழும்பு, ஒக்.21

இத்தாலியில் இடம்பெற்ற கோர விபத்தில் இலங்கையை சேர்ந்த இளைஞன் உயிரிழந்துள்ளார். சிலாபம் பிரதேசத்தை சேர்ந்த அகில பெர்னாண்டோ என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார். அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த நிலையில், மீண்டும் இத்தாலிக்கு சென்ற சில நாள்களில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)



# மத்தளவின் நிர்வாகம் இந்தியா, ரஷ்யாவிடம்

நட்டத்தில் இயங்கும் மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தின் நிர்வாகத்தை இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய இருநாடுகளின் நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கான வரைவு வணிக ஒப்பந்தம், தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த ஒப்பந்தத்தில் மூன்று மாற்றங்களை செய்வது குறித்து அவர் பரிந்துரை செய்துள்ளதாக விமான போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கே.டி. எஸ். ருவன்சந்திர தெரிவித்துள்ளார். (ச)

# கைவிடப்படும் வாடகை வரி

கொழும்பு, ஒக்.21

முன்னைய அரசாங்கம் முன்மொழிந்த வாடகை வருமான வரித் திட்டத்தை கைவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என திறை சேரியின் பிரதி செயலாளர் ஆர். எம்.பி. ரத்நாயக்க தெரிவித்துள்ளார். அரசாங்கம் முன்மொழிந்த வாடகை வருமான வரித் திட்டத்தை மாற்றீடு செய்வதற்காக புதிய யோசனைகள் குறித்து ஆராய்ந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ச)

# போலி நாணயத்தாள் மூவர் கைது

கொழும்பு,ஒக்.21

அக்கரைப்பற்று பாலமுனை பிரதேசத்தில் 5000 ரூபா போலி நாணயத்தாள்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அக்கரைப்பற்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்த திடீர் வீதிச் சோதனை நடவடிக்கையின்போது, கார் ஒன்றை சோதனைக்கு உட்படுத்திய போதே இவ்வாறு போலி நாணயத் தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. (ச-இ)

## நாளை

22.10.2024

செவ்வாய்க்கிழமை - ஐப்பசி - 05

சுபநேரம் : 10.32- 12.02

ராகுகாலம் : 03.02 - 04.32

## நாளொரு நல்வார்த்தை

நெருப்பு விறகைத் தின்பது போல கபடமும், பொறாமையும் நன்மைகளைத் தின்றுவிடும்.

-முகமது நபி-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 06 . 1954



மறைவு 19 . 10 . 2024

## இராமலிங்கம் ஈஸ்வரலிங்கம்

கம்பர்மலை, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், பெரிய அரசடி வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் ஈஸ்வரலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (19.10.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - சௌந்தரம் தம்பதியரின் அன்பு மகனும், சின்னையா - சிவப்பிரகாசப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பாஸ்கரலிங்கம் (அமெரிக்கா) அவர்களின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், திவாகர், மயூரன், கரண்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசி, கவிவண்ணன் (நியூஸ்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், லதுமிகா, வர்ஷினி, கோவிகாஸ் ஆகியோரின் அன்பு பேரனும ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2024) திங்கட்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெரிய அரசடி வீதி,
சங்கத்தானை.

தகவல் :
குடும்பத்தினர்
077 218 2190

(CS/43442) J-1

# மரண அறிவித்தல்

மண்ணில் 10 . 04 . 1951



விண்ணில் 17 . 10 . 2024

## திரு நல்லையா பத்மநாதன்

(ஓய்வு பெற்ற பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை; தர்மகர்த்தாக்களில் ஒருவர் நுணாவில் மேற்கு மணங்குணாய் வீரகத்தி விநாயகர் ஆலயம்)

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நுணாவில், புத்தளம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா பத்மநாதன் அவர்கள் 17.10.2024 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நுணாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நல்லையா-சிவபாக்கியம் தம்பதிகளின் புத்திரனும் நுணாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம்-இராஜபூபதி தம்பதிகளின் மருமகனும் புஸ்பவதி அவர்களின் ஆருயிர் கணவரும் கலைவாணி, விசாலினி சிந்து ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரேமகாந்தன் (கணக்காளர் UK) Dr.மயூரன் (சிரேஷ்ட விரிவுரையாளர் பொறியியற் பீடம், யாழ் பல்கலைக்கழகம், கிந்துஜன் (குடிசார் பொறியியலாளர், Mildura City Council Australia) ஆகியோரின் அன்பு மாமனாரும் தருண், மவிரா, கிறிசி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் காலஞ்சென்ற கைலைநாதன் சற்குணநாதன், ஆனந்தேஸ்வரி அற்புதநாதன் ஆகியோரின் அருமைச்சகோதரரும் புஸ்பராணி, ஞானறஞ்சி, நவீந்திரன், சிவசோதி, சுதாதரணி, துளசி ஆகியோரின் மைத்துனரும் பாஸ்கரமூர்த்தி, யோகலிங்கம் ஆகியோரின் சகலனும், Dr.நிமலன், Dr.கஜந்தன், கஜிதா, சபேசன், சதீசன், சுதர்சன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் அசோக், கோபியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ரதன், லக்ஷமன், அஜானி, விசாகன், கல்யாணி, துயோசரணி, கவிஷன், பவதி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2024) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் நுணாவில் மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 601 8719

(CR 43439) J-1

சிறிய வீட்டுடன் காணி விற்பனைக்கு

கே.கே.எஸ் வீதி, கொக்குவிலில் 1 பரப்புக் காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

076 039 2163

(CS/56900) J-1

# மணமகள் தேவை

1. கோண்டாவில் - கல்வியங்காடு, இந்து, கௌரவகுலம் (V) 1990. ரேவதி, Phd in Engneering, Australia மணமகனுக்கு மணமகள் தேவை. 34935
2. தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம் (V). 1988. உத்தரம். BSc Engineering, USA மணமகனுக்கு மணமகள் தேவை. 34337
3. காரைநகர். இந்து, கௌரவகுலம் (V). 1989. சித்திரை. Graduate, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
4. பருத்தித்துறை, இந்து, கௌரவகுலம் (V). 1990. அவிட்டம், BSc (Hond), கனடா. மணமகனுக்கு மணமகள் தேவை.
5. பருத்தித்துறை, இந்து, கௌரவகுலம் (V). 1987. உத்தரம், BSc, ACMA, CGMA Senior Financial Analyst, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
6. கரம்பன் - Jaffna Town, இந்து, கௌரவகுலம் (V). 1988. ரோகினி, BSc Engineer, கனடா. மணமகனுக்கு மணமகள் தேவை. 28033
7. உரும்பிராய் - இணுவில், இந்து, கௌரவகுலம் (V). 1991. பூரம். Network Engineer, Australia, மணமகனுக்கு மணமகள் தேவை.
8. கந்தர்மடம், இந்து, கௌரவகுலம் (V). 1989. உத்தரம். MSc, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
9. கரவெட்டி, இந்து, கௌரவகுலம் (V). 1986. திருவோணம், BA (Hons), CIMA Fully Qualified, UK மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P
www.thaalee.com

(CS/56499) J-1

போன் :- 077 539 3728
Whatsapp :- 077 803 8193

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 13.08.1942

விண்ணில் 21.10.2023

## திருமதி. சீதாதேவி சிவகுமாரன்

எங்கள் குடும்ப குல விளக்காய்,
அன்பின் இருப்பிடமாய்,
அன்புள்ள தாயாய் திகழ்ந்த, நீங்கள்
எம்மை விட்டு இறையடி இணைந்து,
ஆண்டு ஒன்று ஆனதம்மா..
காலங்கள் சென்றாலும், கண்ணுறங்கும்
வேளையிலும் உங்கள் நினைவால் வாடும்
கணவர் மற்றும் பிள்ளைகள்..

உங்கள் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி.. சாந்தி.. சாந்தி..

தகவல்: குடும்பத்தினர் - 30, உப்புமாவடி, தூர்காபுரம், தெல்லிப்பழை.

# இணுவிலில் வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக்.21

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் அறநெறிப் பாடசாலை, திருநெறிய தமிழ் மறைக் கழகம் இணைந்து நடத்தும் வாணிவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபத்தில் திருநெறிய தமிழ் மறைக் கழகத்தின் தலைவர் ச.முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன் பிரதம விருந்தினராகவும், வேலணை ஆசிரியவாண்மை விருத்தி நிலைய விரிவுரையாளர் சோ.முகுந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-66)

# கசிப்புடன் கைது

யாழ்., ஒக். 21

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊரெழு அம்மன் கோவிலுக்கு அருகாமையில் நீண்ட காலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 42 வயதுடைய சந்தேகநபர், 10 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொத்துகளை மீட்டெடுக்க அரச நிறுவனம் அறிமுகம்

கொழும்பு,ஒக்.21

**சட்டவிரோத சொத்துகளை பறிமுதல் செய்வதற்காக விசேட அரசாங்க நிறுவனமொன்று நிறுவப்பட உள்ளதாக அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இதற்கமைய, சட்டவிரோதமான முறையில் சொத்துகளை குவித்த அரசியல்வாதிகள் உள்ளிட்ட ஏனையவர்களின் சொத்துகள் அரசுடமையாக்கப்படவுள்ளன.

அதற்கென சொத்துகளை மீளமைக்கும் நிறுவனம் என்ற பெயரில் புதிய நிறுவனம் உருவாக்கப்பட உள்ளது. உலகின் அபிவிருத்தி அடைந்த பல நாடுகளில் இந்த நிறுவனம் இயங்கி வருகின்றது.

சட்டவிரோதமான முறையில் ஈட்டிய வருமானங்கள், நிதிச் சலவையின் மூலம் ஈட்டப்பட்ட வருமானங்கள், வேறு வகையிலான சொத்துகள் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ காணப்பட்டால் அவற்றை அடையாளம் கண்டு சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# இந்தியாவுடனான உறவு அபார ஆற்றல்மிக்கது!

## வெளிவிவகார அமைச்சர் பெருமிதம்

கொழும்பு,ஒக்.21

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உறவு ஆற்றல் மிக்கது என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக இயக்கவியல் அபாரமான ஆற்றலைக் கொண்டுள்ளது.

விவசாயம் மற்றும் சுகாதாரம் போன்ற முக்கியமான துறைகளுக்கு அத்தியாவசிய இறக்குமதிகளை வழங்கும் இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளிகளில் இந்தியாவும் ஒன்று. அதேவேளை, இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது, சர்வதேச நாணயநிதியத்தின் ஊடாக இந்தியா செய்த உதவிகள் நினைவுக்கொள்ளத்தக்கவை என்றும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ச-இ)

# கைபேசி வெடிப்பு

கொழும்பு,ஒக்.21

ஹட்டனில் உள்ள ஆடை விற்பனை நிலையமொன்றில் வேலைசெய்பவரின் கையடக்கத்தொலைபேசியின் பற்றறியை கழற்றி சோதனை செய்யும் போது பற்றறி வெடித்துச்சிதறிய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. குறித்த விற்பனை நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் இந்த வெடிப்புச் சம்பவம் பதிவாகியுள்ளது. கையடக்கத் தொலைபேசிகளை அதிக நேரம் சார்ஜ் செய்வதால் பற்றறி வெடிக்கும் அபாயம் உள்ளதென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச)

# 9 வாகனங்கள் மோதி விபத்து

கொழும்பு,ஒக்.21

மாத்தறை, கொட்டகொட பிரதேசத்தில் ஒன்பது வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்து நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி ஒன்று வீதியில் பயணித்த 2 முச்சக்கரவண்டிகள், 2 மோட்டார் சைக்கிள்கள், 2 கார்கள், பஸ் மற்றும் உழவு இயந்திரம் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தின் போது இரண்டு வெளிநாட்டுப் பெண்கள் உட்பட பலர் காயமடைந்துள்ளனர். விபத்துத் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)



# இஸ்ரேலுக்கு எதிராக இலங்கையும் ஒப்பம்

கொழும்பு, ஒக்.21

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ், தமது நாட்டுக்குள் நுழைவதற்குத் தடை விதித்துள்ள இஸ்ரேலை கண்டித்து 105 நாடுகள் கையெழுத்திட்ட கடிதத்தில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கைத் தூதுவர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார். காஸாவில் ஏற்பட்ட மனித அவலங்களுக்கு மத்தியில் அமைதி முயற்சிகளுக்காகவே இஸ்ரேலுக்கு செல்ல, ஐக்கிய நாடுகளின் செயலாளர் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இந்நிலையில் இலங்கை அரசாங்கம் பாலஸ்தீன பிரச்சினைக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் நிலையில், இஸ்ரேலுக்கு எதிரான இந்த கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளது. (ச)

# மலையகப் பாடசாலைகளை தரமுயர்த்த இந்தியா உதவி

கொழும்பு,ஒக்.21

இலங்கையில் பெருந்தோட்டப் பாடசாலைகளை தரமுயர்த்துவதற்கான மானிய உதவியை இந்தியா இரட்டிப்பாக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, கல்வி மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜே.எம். திலகா ஜெயசுந்தர ஆகியோர் இது தொடர்பான இராஜதந்திர கடிதங்களில் அண்மையில் கொழும்பில் வைத்து கையெழுத்திட்டுள்ளனர்.

இதன்படி, பெருந்தோட்டப் பிரதேசங்களில் 9 பாடசாலைகள் இந்திய அரசாங்கத்தின் மானிய ஆதரவை பெறவுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கூடுதல் நிதியுடன், திட்டத்திற்கான மொத்த அர்ப்பணிப்பு இப்போது 600 மில்லியன் ரூபாய்களாக உயர்ந்துள்ளது என இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# தினம் தெரியுமோ?

**கி**ணறு தோண்டப் பூதம் வாறமாதிரி உந்தச் சங்குபிட்டிப் பாலத்தை நோண்டினாலும் பெரிய பூதம் வெளிக்கிடும் போல கிடக்குது. வல்லைப் பாலத்தில ஆக்கள் வேகமாப் போய் சறுக்கி விழக் கூடாது எண்டதுக்காக ரண்டுப்க்கமும் வேலையாக்களை நிப்பாட்டத் தெரிஞ்சவைக்கு, உந்தச் சங்குப்பிட்டிப் பாலத்தடியில இப்பிடி ஆக்களை நிக்கவைக்கவேணும் எண்டு தெரியாமல் போட்டுதுபோல. ஏற்கனவே அந்தப் பாலத்தை கறள் அரிச்சு திண்டதால டிப்பர் மாதிரி பெரிய வாகனங்கள் இப்போதைக்கு அதால போய் வாறது பாலத்துக்கும் கூடாது, வாகனங்களுக்கும் ஆபத்து எண்டு போன வெள்ளிக்கிழமை அறிவிச்சவை.

ஆனால் அந்த அறிவிப்பு எல்லாருக்கும் போய்ச்சேர்ந்திருக்காதுதானே. அப்ப என்ன செய்திருக்க வேணும்? பாலத்திண்ர தொடக்கத்திலையும் முடிவிலையும் வேலையாக்களையோ, இல்லாட்டி பொலிஸையோ நிப்பாட்டி டிப்பர் மாதிரியான பெரிய வாகனங்களை மறிச்சு, வேற பாதையால போகச் சொல்லி அனுப்பி இருக்க வேணும். சரி அதுக்குத்தான் உடனடியா வழி இல்லை எண்டால் சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அங்கால ஒரு பொலிஸ் பொயின்ரும், இஞ்சாலை ஆமியும் பொலிஸும் நிக்கிற மினிமுகாமும் இருக்கு. அவையைக் கொண்டுவிச்சாவது சங்குப்பிட்டிப் பாலத்தால டிப்பர்கள் போகாமல் செய்திருக்கலாம். ஆனால் ஆருக்கும் அந்த யோசினை வரவே இல்லை. பகிடி என்னெண்டால் அன்டைக்கு பகல் முழுக்க சங்குப்பிட்டிப் பாலத்தால போன பஸ்ஸுகளில போன சனமெல்லாம், இறங்கி நடந்துபோய், பாலம் கழியத்தான் திரும்பவும் ஏறினவை. ஆனால் கள்ளமண்ணோட வந்த டிப்பர்கள் வலுகலாதியா அந்தப் பாலத்தால வழமைமாதிரி போய் வந்திருக்கு. அந்த டிப்பர்களை தங்கட சென்றிபொயின்றில பதிஞ்சு போட்டு ஆமிக்காரரும், பொலிஸும் போகவும் விட்டிருக்கினம்.

சங்குப்பிட்டிப் பாலம் மட்டுமில்லை, பரந்தனில இருந்து பூநகரி மட்டும் வாற றோட்டும், நாவற்குழியில இருந்து பூநகரியால போற ஏ-32 றோட்டும் உந்த கள்ளமண் டிப்பர்களாலதான் வேளைக்கே நாசமாகி இருக்குது. உந்தக் கள்ளமண் டிப்பர்களைக் கட்டுப்படுத்தினால் தான் அந்த றோட்டுகளையும் உந்தப் பாலத்தையும் இனியும் சேதமாகாமல் காப்பாத்தலாம். வருத்தத்தை மாத்திறதை விடவும் வருத்தத்துக்கு என்ன காரணமெண்டதைக் கண்டுபிடிச்சு அதை இல்லாமல் செய்யிறதுதான் முக்கியம். பாலத்தை திருத்திப்போட்டும் டிப்பர்களை கண்டபடி கள்ள மண்ணோட ரேஸ் ஓட விட்டால், கெதியில பாலம் மட்டுமில்ல றோட்டும் பாழாத்தான் போகப்போகுது. அதுக்கும் ஏதும் வழி கண்டுபிடிக்க மாட்டினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் இறைச்சிக்கடை, மீன்கடை பொதுச்சந்தை மற்றும் சுற்றுலா மையம் ஆகியனவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2025

01.01.2025 தொடக்கம் 31.12.2025 வரையான 12 மாத காலப்பகுதிக்கு பின்வரும் குத்தகைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் (தொ.பே.இல. 0242260914) பின்வரும் நிபந்தனைகளுடன் உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | குத்தகை விபரம் | நிரந்தர கொல்களம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை, வருடாந்த குத்தகை (ருபா.) | மீளளிப்படும் வைப்பு (ருபா.) | கேள்விப் படிவக்கட்டணம் (ருபா.) |
|---|---|---|---|---|---|
| 01 | ஆண்டியாபுளியங்குளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 742,775.00 | 8000.00 | 1000.00 |
| 02 | மாங்குளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 597,300.00 | 8000.00 | 1000.00 |
| 03 | சின்னச்சிப்பி குளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 293,150.00 | 8000.00 | 1000.00 |
| 04 | சூடுவெந்தபுலவு மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 1,107,040.00 | 8000.00 | 1000.00 |
| 05 | பாவற்குளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 787,600.00 | 8000.00 | 1000.00 |
| 06 | செட்டிகுளம் மாட்டிறைச்சிக் கடை | சூடுவெந்தபுலவு | 331,100.00 | 8000.00 | 1000.00 |
| 07 | மாங்குளம் பொதுச் சந்தை | - | 132,480.00 | 8,000.00 | 1000.00 |
| 08 | மாங்குளம் மீன் கடை | - | 406,800.00 | 8,000.00 | 1000.00 |
| 09 | செட்டிகுளம் மீன் கடை | - | 129,360.00 | 8,000.00 | 1000.00 |
| 10 | அருவித்தோட்டம் சுற்றுலா மையம் | - | 17,200.00 | 5,000.00 | 1000.00 |
| 11 | சூடுவெந்தபுலவு மீன் கடை | - | 22,200.00 | 8,000.00 | 1000.00 |
| 12 | செட்டிகுளம் பொதுச்சந்தை | - | 60,000.00 | 8,000.00 | 1000.00 |
| 13 | செட்டிகுளம் பொதுமலசலகூடம் | - | 6,000.00 | 5,000.00 | 1000.00 |
| 14 | குருக்கள் புதுக்குளம் கடை தொகுதி | - | 40,000.00 | 8,000.00 | 1000.00 |
| 15 | வேப்பங்குளம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் | - | 27,000.00 | 8,000.00 | 1000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் காலம் - 21.10.2024 – 04.11.2024 ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை
2. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி - 05.11.2024 ம் திகதி காலை 10.00 மணி வரை
3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் காலம் - 05.11.2024ந் திகதி காலை 10.00 மணிக்கு
4. 05.11.2024 திகதி காலை 10.00 மணிக்குப்பின்பு கிடைக்கப்பெறும் கேள்வி விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.
5. கேள்விப்படிவங்கள் இரண்டு பிரதிகளில் வழங்கப்படும். அவை இரண்டையும் ஒரே மாதிரியாக பூரணப்படுத்தி தனித்தனி தபால் உறைகளில் இட்டு தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர், கடையின் பெயர் என்பன தெளிவாக இடப்பட்டு அரக்கு முத்திரையிட்டு செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, மன்னார் மதவாச்சி பிரதான வீதி, செட்டிகுளம், வவுனியா எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியிலோ உரிய நேரத்திற்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படுதல் வேண்டும்.
6. கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் செட்டிகுளம் பிரதேசத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராம சேவையாளரின் சான்றிதழுடன் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்பிரதியுடன் நேரடியாக சமுகமளித்தல் வேண்டும்.
7. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் ஏற்கனவே பிரதேச சபையினால் தவறுநராக கணிக்கப்பட்டு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராகவோ அல்லது சபைக்கு எவ்வித நிலுவைக்கட்டணங்களையும் முன்னைய காலங்களில் அல்லது நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக இருந்தால் அவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
8. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவாக கேள்வி கோருபவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
9. கேள்வி திறத்தலின்போது கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்டவர் பார்வையாளராக கலந்து கொள்ள முடியும்.
10. அதிகூடிய கேள்வித்தொகையினை சமர்ப்பித்தவருக்கே குத்தகை வழங்கப்படுவதுடன், அவர் குத்தகை எடுக்கத்தவறின் அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்தியாக அமைந்தால் பரிசீலிக்கப்படலாம்.
11. சித்தியெய்தும் கேள்விதாரர் 05.11.2024ல் இருந்து 07 நாட்களிற்குள் 12 மாத குத்தகையின் 1/3 பங்கு வைப்புத் தொகையைச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படுவதுடன் கேள்வி வைப்பும் மீளளிக்கப்படமாட்டாது.
12. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் செயலாளர்க்கு பூரண அதிகாரம் உண்டு.
13. வருடத்தின் வழமையான போயா தினங்கள் மற்றும் வெசாக், பொசன் தினங்களில் இறைச்சி, மீன் கடைகள் மூடப்படுவதோடு அதற்காக குத்தகை கழிவு எதுவும் வழங்கப்பட மாட்டாது.
14. இறைச்சிக்கடை, மீன்கடை, பொதுச்சந்தை மற்றும் சுற்றுலா மையம் என்பன குத்தகைக்கு வழங்கப்பட்ட பின்னர் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி தொடர்ந்து மூடிக்காணப்பட்டால் அந்நாட்களுக்குரிய தண்டப்பணம் அறவிடப்படும்.
15. கச்சேரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற விலைப்பட்டியலுக்கு அமைவாகவே மாட்டிறைச்சி, மீன் என்பன விற்பனை செய்யப்பட வேண்டும்.
16. குத்தகைக்கு எடுத்தவர் உப குத்தகைக்கு விடுவது தெரியப்படும் சந்தர்ப்பத்தில் குத்தகை உரிமை இரத்துச் செய்யப்படும்.
17. குத்தகை எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
18. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு – கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது.**

செயலாளர்,
பிரதேச சபை,
வெங்கலச்செட்டிகுளம்.
14.10.2024

(CR/43415) J-1


# தமிழ்த்தேசியம் உயிர்மூச்சு

## சிறீதரன் தெரிவிப்பு

கிளிநொச்சி , ஒக். 21

தமிழ்த் தேசியம் மட்டுமே ஈழத்தமிழர்களுக்கான அடையாளம். அத்தகைய அடையாளத்தை நிரந்தரமாகப் பேணும் வகையிலான அரசியல் செல்நெறிகளின் மூலம், இனத்தின் இறைமையை மீட்கும் என் அரசியற் பணியும் பயணமும் தொடரும்.

-இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமாகிய சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள் ளார்.

கிளிநொச்சி நகர வட்டார சமூகமட்ட அமைப்பு களின் ஏற்பாட்டில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஈழத்தமிழர்களை அரசியல் வெறுமை சூழ்ந்த காலத்தே, இனத்துக்கே அடையாளம் தந்த 'தமிழ்த் தேசியத்தை' கொள்கையாக வரித்து நாம் ஆரம்பித்த அரசியற் பயணத்தை, அதே தளத்தில் நின்று பிறழாத பிரதிநிதிகளாக இதுவரை காலமும் முன்னெடுத்திருக்கிறோம். எங்கள் அடையாளங்களை இழக்கத் துணியும் எந்த மாற்றங்களுக்கும் எமது இளைய தலைமுறையினர் உட்பட்டுவிடக்கூடாது - என்றார். (ச-113)

# ஆசிரியர் தாக்கியதில் மாணவனுக்கு காயம்

வவுனியா, ஒக். 21

வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் தாக்கியதில் காயம் ஏற்பட்டதாகத் தெரிவித்து மாணவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

தரம் பதினொன்றில் கல்வி கற்கும் மாணவன் மீது ஆசிரியர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் காயமடைந்த மாணவன் வவுனியா மருத்துவமனையில் கடந்த இரு தினங்களாக சிகிச்சை பெற்று நேற்று வீடு திரும்பியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ஒ-110)

# மரத்துடன் மோதி பாரவூர்தி விபத்து

*கிளிநொச்சி , ஒக். 21*

*முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஒட்டுசுட்டான்- முள்ளியவளை வீதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த சிறியரக பாரவூர்தி ஒன்று வீதியை விட்டு விலகி மரத்துடன்மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்துள்ளது. விபத்துத் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.*

*(ச-19)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியாளரால் பொருள் திருட்டு

சாவகச்சேரி, ஒக். 21

பணம் மற்றும் சிகரெட் பண்டங்களை உணவகத்தில் பணியாற்றிய நபரொருவர் திருடிச் சென்றுள்ளார் என உரிமையாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி நகரிலுள்ள உணவகமொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ச-9)

# உரிமைகளை வென்றெடுப்போரை நாடாளுமன்றம் அனுப்புங்கள்



## மன்னார் ஆயர் வலியுறுத்து

**மன்னார் , ஒக். 21**

**எமது நாளாந்த பொருளாதார மற்றும் வாழ்வியல் தேவைகள் என்றுமில்லாதவாறு மேலோங்கி நிற்கும் இவ்வேளையில் இதுவரை காலமும் போராடி வந்த அரசியல் உரிமைகளை நாடாளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.**

-இவ்வாறு இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

உரிமை மறுப்புக்கு இலக்கான சிறுபான்மை மக்களாகிய நாம் நமது அனைத்து வகையான உரிமைகளையும் பெறுவதற்குரிய ஆகக்கூடிய வழிமுறை அரசியல்தான்.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் முக்கியமான திருப்புமுனைகள் நிறைந்த ஒரு காலக்கட்டத்தில் நாம் நிற்கின்றோம். இந்தத் தேர்தல் பொது மக்கள் மத்தியில் யாருக்கு வாக்களிப்பது என்ற குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

யாருக்கு வாக்களிக்கக்கூடாது என்பதையும் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதையும் வாக்காளர்கள் கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டும்.

இதுவரை காலமும் போராடிவந்த அரசியல் உரிமைகளை நாடாளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்கவேண்டும்.

ஒளிமயமானதொரு எதிர்காலத்தை எமக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு தீர்மானமிக்க தேர்தலாக இது அமைவதற்கு நாம் எல்லோரும் எமது வாக்குரிமையைத் தவறாது பயன்படுத்தவேண்டும்- என்றார். (ச-60,56)

# துணுக்காய் பிரதேசசபை
# 2025 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தை, ஆட்டிறைச்சிக்கடைகள், மாட்டிறைச்சிக்கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01.01.2025 தொடக்கம் 31.12.2025 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் :- 21.10.2024 –07.11.2024
கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 07.11.2024 பி.ப 12.30 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி :- 07.11.2024 பி.ப 01.00 மணி வரை
கேள்வி திறக்கப்படும் திகதி :- 07.11.2024 பி.ப 2.00 மணி
கேள்வி திறக்கும் இடம் :- துணுக்காய் பிரதேசசபை அலுவலகம்

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், துணுக்காய் பிரதேசசபை , துணுக்காய் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை " பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு " என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**இறைச்சிக்கடை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 25,476.00 | 1,500.00 | 500 |
| 2 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 258,446.00 | 2,500.00 | 500 |
| 3 | கோழி இறைச்சிக்கடை | துணுக்காய் | 39,050.00 | 1,500.00 | 500 |
| 4 | ஆட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 70,400.00 | 1,500.00 | 500 |
| 5 | மாட்டிறைச்சிக் கடை | மல்லாவி | 2,016,850.00 | 2,500.00 | 500 |
| 6 | கோழி இறைச்சிக்கடை | மல்லாவி | 1,552,100.00 | 1,500.00 | 500 |
| 7 | ஆட்டிறைச்சிக்கடை | ஜயன்கன்குளம் | 15,378.00 | 1,500.00 | 500 |
| 8 | மாட்டிறைச்சிக் கடை | ஜயன்கன்குளம் | 132,788.00 | 2,500.00 | 500 |
| 9 | கோழி இறைச்சிக்கடை | ஜயன்கன்குளம் | 27,610.00 | 1,500.00 | 500 |

**பொதுசந்தை**

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | துணுக்காய் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 29,791.00 | 1,500.00 | 500 |
| 2 | ஜயன்கன்குளம் பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | ஜயன்கன்குளம் | 29,282.00 | 1,500.00 | 500 |
| 3 | மல்லாவி பொதுச்சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | மல்லாவி | 1,837,000.00 | 1,500.00 | 500 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் இலங்கை பிரஜையாகவும் தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கக்கூடியவராகவும் சான்றுகள் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து கேள்விகோர தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
3. எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபை தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வி தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
4. வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
5. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
6. எம்மால் நிர்ணயிக்கப்படும் விலங்கறுமனையிலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
7. இறைச்சிக்காக ஆடு , மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.
8. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
9. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப்பணத்தை ஒரு வார காலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

மா.மாகாதேவன்
செயலாளர்
பிரதேசசபை, துணுக்காய்.

(CR/43431) J-1

# காஸா மீது தாக்குதல் 75 பேர் உடல் சிதறி பலி

காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்ட வான்தாக்குதல்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 75 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. இந்தத் தாக்குதல்களில் பலர் காயமடைந்துள்ளனர் என்றும், பலர் இடிபாடுகளிடையே சிக்கியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

பொதுமக்கள் அதிகளவில் வசிக்கும் பகுதி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 75 பேர் உயிரிழந்தனர் என ஹமாஸின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. வபா எனப்படும் பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்பு முற்றாக அழிக்கப்பட்டுள்ளது என பலஸ்தீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அதேவேளை, இந்த உயிரிழப்புகள் தொடர்பான விவரங்கள் ஆராயப்படுகின்றன என்று தெரிவித்துள்ள இஸ்ரேல் எனினும் ஹமாஸ் வெளியிட்டுள்ள தற்போதைய புள்ளிவிவரங்கள் மிகைப்படுத்தப்பட்டவை எனத் தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் மலிவு விற்பனை
# மகா சில்க்ஸ்




தீபாவளி திருநாளை முன்னிட்டு



21.10.2024 முதல்
31.10.2024 வரை
கொள்வனவு
செய்யப்படும்
பொருட்களுக்கு
25%
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்
என்பதனை
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
அறியத்தருகின்றோம்.



பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்
021 222 7359

(CS/56503) J-1


# உரிமைகளை வென்றெடுக்க நிதானமாக முடிவெடுங்கள்

## சுயேச்சை வேட்பாளர் கே.வி.தவராசா அழைப்பு



கிளிநொச்சி, ஒக். 21

தமிழர்களின் வரலாறுகளைத் திரிவுபடுத்த துணை போவதற்கும் ஒரு கூட்டம் உள்ளது. எனவே எமது மக்களின் குறைகளையும் வேதனைகளையும் எப்படித் தீர்க்கலாம் என்பது பற்றி நிதானமாக முடிவெடுக்க வேண்டியவர்களாகத் தமிழ் மக்கள் மாறவேண்டும்.

- இவ்வாறு சுயேச்சைக்குழு-14 இல் போட்டியிடும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னிலங்கை கட்சிகளும் அரசியல்வாதிகளும் தங்களது நிகழ்ச்சி நிரல்களை தமிழர் பகுதிகளில் மிக நிதானமாக நகர்த்தி வருகின்றனர். அவர்களுக்கு வசைபாடுவதற்கும் அவர்களுடன் சேர்ந்து தமிழர்களின் வரலாறுகளைத் திரிவு படுத்தத் துணை போவதற்கும் ஒரு கூட்டம் இருக்கின்றது.

எமது மக்கள் காலம் காலமாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இந்தத் துயர நிலை தொடர்ந்தும் நீடிக்கக்கூடாது.

இன்று நாம் அனைவரும் ஓர் இக்கட்டான காலகட்டத்தில் இருக்கின்றோம். எங்களுடைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையின்மை என்பது மிகப் பெரும் சாபக்கேடாக மாறியிருக்கின்றது.

ஆகவே தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் கட்சி ரீதியாக இல்லாவிட்டாலும் கொள்கை ரீதியாக ஒன்றுபடுவது தவிர்க்க முடியாததொன்றாகும் - என்றார். (ச)


## காணி விற்பனைக்கு

- யாழ், பிறவுண் வீதியில் 2 பரப்பு காணியும்
- யாழ் நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 10 பரப்பு காணியும்
- யாழ் மானிப்பாய் வீதியில் 5 பரப்பு காணியும்
- ஆனைக்கோட்டை உயரப்புலத்தில் 6 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
077 723 2535


# மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 07 . 1938
மறைவு 19 . 10 . 2024

## ஆறுமுகம் மகேந்திரன்

**(முன்னாள் உரிமையாளர், இந்திரா எஞ்ஜினியர்ஸ்)**

சங்கரத்தை, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மகேந்திரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (19.10.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகப்பர் ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு கனிஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி - சுருதி தம்பதியரின் அன்பு மருமகனும், குசேலா அவர்களின் பாசமிகு ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், தங்கரத்தினம், M.A. வேலுப்பிள்ளை, M.A.சுப்பிரமணியம், Dr.M.A.இராஜரட்ணம், செல்லத்துரை, தர்மலிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திவாகரன் (பொறியியலாளர், ஐக்கிய அமெரிக்கா), வைத்திய கலாநிதி ரஜனி (பொது வைத்திய நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), வைத்திய கலாநிதி சுதர்சனா (அவுஸ்திரேலியா), கிரிஜா (சிரேஸ்ட விரிவுரையாளர், விவசாயபீடம், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், ஜோதிகா (பொறியியலாளர், ஐக்கிய அமெரிக்கா), வைத்திய கலாநிதி ஸ்ரீகிருஷ்ணா (என்பு, முறிவு சத்திரசிகிச்சை நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), ஆரூரன் (கணக்காளர், அவுஸ்திரேலியா), நிசாந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஸ்வினி, அருணன், ஸ்ரீவாசினி, ஸ்ரீவைஷ்ணவி, அருக்ஷன், அஜந்தன், ஆர்த்திகன், அக்ஷயா, ஆதித்தியன், பிரதீசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2024) திங்கட்கிழமை பிற்பகல் 02.30 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்
021 225 2519

(CR/43443) J-1

# 2 ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தையா தவபாலசந்திரன்**

**(பேக்கரி ராசன்-செல்வம் பேக்கரி))**

*திதி: தேய்பிறை சதுர்த்தி*

மண்ணுலகில் பிறந்து மண்ணுலகை வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
எம்முயிர்த் தெய்வமே!
விண்ணுலகம் சென்று இன்று ஓராண்டு ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் எம் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்காத நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தோற்றம் 23.06.1952
மறைவு 12.11.2022

சோளங்கன், கரணவாய் மேற்கு,
கரவெட்டி

நினைவுடன்...
குடும்பத்தினர்.

# 37ஆம் ஆண்டு நினைவு தினம்



இந்திய இராணுவத்தினரால்,
யாழ் போதனா வைத்தியசாலை
மீது நடத்தப்பட்ட தாக்குதலில்
அன்புலன்ஸ் சாரதியான

**அமரர் வைத்திலிங்கம்**
**சண்முகலிங்கம்**

உள்ளிட்ட 21 பேர் படுகொலை
செய்யப்பட்டு 37 ஆம் ஆண்டு
நினைவு தினமான இன்று
அவர்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் [illegible]
மறைவு 21.10.1987
திதி: சதுர்த்தசி

திருமதி சண்முகலிங்கம்
குடும்பத்தினர்.
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(CS/1667) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுகக் கூட்டம்!

சனநாயக தமிழரசு கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுகக் கூட்டமானது வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.
நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து போரில் இன்னுயிர்களை தியாகம் செய்த உறவுகளுக்கு இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்ட பின்னர் கூட்டம் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து வேட்பாளர்கள் தமது அறிமுக விளக்க உரைகளை ஆற்றினர்.
சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பினர் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழு 14 இல் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.
நேற்றைய அறிமுக நிகழ்வில், முதன்மை வேட்பாளரான கே. வி. தவராசா, ஏனைய வேட்பாளர்களான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், புவனேஸ்வரன் வசந், விமலேஸ்வரி சிறிகாந்தரூபன், குணாளன் கருணாகரன் ஆகியோரது அறிமுகம் இடம்பெற்றது. (ஒ-27)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆவணப்படத் திரையிடல்

யாழ்ப்பாணம், ஒக். 21
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் நாடகமும் அரங்கக் கலைகளும் துறையின் ஏற்பாட்டில் ஈழத்து அரங்க ஆளுமை ஏ.சீ.தாசீசியஸ் குறித்தான ஈழக் கூத்தன் ஏ.சீ.தாசீசியஸ் எனும் ஆவணப்படத் திரையிடல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் நாடக ஆர்வலர்களையும், திரை ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-66)

## மஹிந்தவைக்...

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
புலிப் பயங்கரவாதிகளான புலம்பெயரிகள் இந்நாட்டைப்பிளவுபடுத்துவதற்கும், தமது இலக்கை அடைவதற்கும் தொடர்ந்து முயற்சித்துவருகின்றனர். அதேபோல உலகளவில் அடிப்படைவாதம், பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதம் தலைதூக்கியுள்ளன.
இவற்றுக்கு எதிராகப் போராடி, போரை முடித்த தலைவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியது அரசின் கடப்பாடாகும் - என்றார். (அ-ச-44)

## தமிழ்த்...

மகிழூர் கிராமத்தில் தேர்தல் அலுவலகத்தை நேற்றுமுன்தினம் திறந்து வைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த காலங்களில் நான் ஒருபோதும் தேசியக் கட்சிகளின் சார்பில் தேர்தல்களில் களமிறங்கவில்லை. அம்பாறை மாவட்டத்திலும் நான் தனித் தமிழ்க் கட்சியிலே தான் தேர்தலில் களமிறங்கி இருந்தேன். இம்முறையும் நான் மட்டக்களப்பில் தேசிய ஜனநாயக முன்னணி எனும் தமிழ்க் கட்சியிலேதான் போட்டியிடுகிறேன்.
தேசியக் கட்சியில் நாங்கள் தேர்தலில் களமிறங்கினால் நிச்சயமாக அதில் மூன்று முஸ்லிம் வேட்பாளர்களைக் களமிறக்குவார்கள். எம்முடைய வாக்குகள் அவர்களைத்தான் வெற்றிபெற வைக்கும். அதனால்தான் நாங்கள் தேசியக் கட்சிகளின் சார்பில் தேர்தலில் களமிறங்கவில்லை. இம்முறையும் நாங்கள் எட்டு தமிழ் வேட்பாளர்களோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் களமிறங்கி இருக்கின்றோம்.
போர் நடைபெற்றபோது எமது மக்களின் இழப்புகள், போரின் அழிவுகள் உலக அரங்குக்கு தெரியவரவேண்டும். அது நாடாளுமன்றத்தில் பேசப்படவேண்டும். தமிழர்களின் குரல்கள் நாடாளுமன்றத்தில் ஒலிக்கவேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அந்தக் கடமையை ஆரம்பத்தில் அவர்கள் நன்றாக மேற்கொண்டிருந்தார்கள். அதனை நான் வரவேற்கின்றேன். சம்பந்தன் ஐயா இருக்கும்போது அது நன்றாகத்தான் செயற்பட்டது. அவர் உயிரிழந்த பின்னர் அவர்கள் சிதறுண்டு போய்விட்டார்கள். காலப்போக்கில் அவர்கள் பணத்துக்கு அடிமையாகி பதவிகளுக்கு ஆசைப்பட்டு சிதறிப் போயுள்ளார்கள். இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வரலாறாகும் - என்றார். (அ-ஒ-இ)

## அரியநேந்திரன்...

ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன் பின்னர், பொலிஸார் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.
ஜனாதிபதி வேட்பாளர்களின் பரப்புரை வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளை ஒப்படைப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கியிருந்த கால அவகாசம் கடந்த 13ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 38 வேட்பாளர்களில் 35 வேட்பாளர்கள் உரிய அறிக்கைகளை வழங்கியிருந்தனர்.
பத்தரமுல்லை சீலரதன தேரா், சுயேச்சை வேட்பாளர் சரத் கீர்த்திரத்ன மற்றும் தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேந்திரன் பாக்கியசெல்வம் ஆகியோர் வருமான செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை.
அதன்படி, மூன்று வேட்பாளர்கள் தொடர்பான எதிர்கால சட்ட நடவடிக்கைகள் சட்டமா அதிபர் ஊடாக பொலிஸாரின் தலையீட்டின் ஊடாக மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை - தமிழ்ப் பொதுவேட்பாளரான அரியநேந்திரனை நிறுத்திய தரப்புகள், தேர்தல்கள் ஆணைக்குழுவின் கால அவகாசத்துக்கு முன்பதாக மின்னஞ்சலில் உரிய விவரங்களை அனுப்பி வைத்ததாகவும் சட்ட ஏற்பாட்டின் படி அவற்றை நேரில் கையளிக்கவேண்டும் என்பதால் கால அவகாசம் முடிவுற்று 12 மணிநேரத்துக்குள்ளேயே அவற்றை நேரில் கையளித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ச-இ)

## 'யாழ்தேவி'....

கூடிய வகையில் வடக்கு ரயில் மார்க்கத்தில் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படவிருந்தன. இவ்வாறான பின்னணியில், உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் வரை மார்க்கத்தினூடாக ரயில் சேவையை முன்னெடுக்க முடியாது என ரயில் கட்டுப்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இதனாலேயே யாழ்தேவி ரயில் சேவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## உருவாகிறது...

வானிலை மையம் தெரிவித்துள்ளது.
மத்திய கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதிகளில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது. தொடர்ந்து புதன்கிழமை காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற உள்ளது. பின்னர் புயல் உருவாகி, தமிழக கடற்கரைப் பகுதிகளை விட்டுவிலகி, ஒடிசா மற்றும் மேற்கு வங்கத்தை நோக்கி நகரவுள்ளது. இந்த புயலுக்கு கட்டார் பரிந்துரைத்த 'டானா' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## யாழ்ப்பாணத்தைச்...

பஞ்சலிங்கம் பார்த்தீபன் (வயது-44) என்பவரே உயிரிழந்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,
கனடாவின் ஒன்ராறியோ மாநிலம் மார்க்கம் பகுதியில் உள்ள அவரது வீட்டு வாசலில் வைத்து நேற்று அதிகாலை (உள்ளூர் நேரம் மாலை 6 மணியளவில்) இனம்தெரியாத நபர்களால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் அவர் உயிருக்குப் போராடியதைக் கண்டவர்கள் இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்து பார்த்த போது அவர் உயிரிழந்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.
துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவரின் சடலத்தைமீட்டுமேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.
முன்பகை காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவருகின்றது. (அ-ஒ-100)

## பற்றைக்குள்...

எனக் கண்டறிந்தனர். கார் மேலதிக விசாரணைகளுக்காக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (அ-ஒ-26)

## ஓட்டோ...

துறையிலிருந்து யாழ். நகர் நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபப் பெண்ணின் மீது மோதியதில் விபத்து நடந்துள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த வயோதிபப் பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.
விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய முச்சக்கரவண்டிச் சாரதி கோப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-66-26)

## புதிய...

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் நியமிக்கப் படும் அரசாங்கத்தில் தற்போதைய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவே பிரதமராக இருப்பார் என்றும் சுட்டிக்காட்டினார். (அ-ச)

## தேசியத்தில்...

பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான தேசியமட்ட வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.
20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் செ.நிருஷிகா மூன்று மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், சி.டிலக்சிகா 2.70 மீற்றர் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கிப் பெருமை சேர்த்துள்ளனர். (அ-ஒ-66)

## 8 அரச...

1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜனாதிபதிக்குள்ள உரிமைகள் சட்டத்துக்கமைவாக மஹிந்த ராஜபக்சவும், ரணில் விக்கிரமசிங்கவும் தம்வசமுள்ள மேலதிக வாகனங்களை மீள ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.
இதேவேளை - ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட எழுத்துமூலம் பணிப்புரையின் பிரகாரம் இன்று திங்கட்கிழமை மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட 6 உத்தியோக பூர்வ வாகனங்களில் 3 வாகனங்களைக் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் மஹிந்த ராஜபக்சவின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ-ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெற்றிக்கனி எட்டாக்கனி

## சாகர விமர்சிப்பு

கொழும்பு, ஒக். 21

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தோல்வியுற்ற ஓர் அரசியல் தலைவர் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் விமர்சித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்குமாறு ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள வேண்டுகோள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரது நீண்டநாள் கனவான ஜனாதிபதிப் பதவியை அடைந்து கொள்வதற்கு பொதுஜன பெரமுனக் கட்சி ஆதரவளித்தது. கடைசியில் எங்கள் கட்சியையும் அவர் அழித்துவிட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க ஆதரவளித்தது உண்மையில் எங்கள் கட்சிமேற்கொண்ட மிகப்பெரும் பிழையாகும். அதனால்தான் கடந்த தேர்தலில் நாங்கள் தோல்வியுற்றோம். ரணில் விக்கிரமசிங்க வரலாற்றில் என்றைக்கும் தேர்தல்களில் வெற்றிபெற்றதேயில்லை. என்றைக்கும் அவர் தோல்வியுற்ற ஓர் அரசியல்வாதியே என்றும் சாகர காரியவசம் தெரிவித்தார். (ச-இ)

## ஜனாதிபதியின் உத்தரவு ஆணைக்குழு நிராகரிப்பு

கொழும்பு, ஒக்.21

மாகாண ஆளுநர்களின் மேற்பார்வையின் கீழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களால் மேற்பார்வையிடப்படும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஜனாதிபதியின் உத்தரவை, இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

ஆளுநர்கள் அரசியல் ரீதியாக நியமனம் செய்யப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் இதுபோன்ற நடவடிக்கைகள் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் அமையும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லலாம் எனவும் மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அநுர ஆட்சியிலும் பொருளாதார வீழ்ச்சி



கொழும்பு, ஒக். 21

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தில் மிக விரைவில் நாடு பொருளாதார வீழ்ச்சியொன்றை சந்திக்கும் என்று மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தின் போக்குகளைப் பார்த்தால் நாடு மிக விரைவில் பொருளாதார வீழ்ச்சியொன்றை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படும்.

இப்போதைக்கு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெறுகின்றவர்களே அதன் பின்னர் நாட்டைப் பொறுப்பெடுக்க வேண்டியிருக்கும்.

எனவே மக்கள் சிலிண்டர் சின்னத்துக்குக் கூடுதலாக வாக்களித்து கூடுதல் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். (ச-இ)

## ஜோன்ஸ்டன் தலைமறைவா?

கொழும்பு, ஒக். 21

சர்ச்சைக்குரிய வாகன மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தலைமறைவாகியுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவின் உள்ளகத் தகவல்கள் தெரிவிப்பதாக பிரதான சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. சந்தேகநபரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவின் குழுகள் தொடர்ந்து செயற்பட்டு வந்தாலும் அவர் தொடர்பில் எந்தவொரு தகவலும் இதுவரையில் கிடைக்கவில்லை.

சந்தேகநபரான முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தங்கியிருந்த வீடு மற்றும் அவர் தங்கியிருக்கும் ஏனைய இடங்கள் அனைத்திலும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் எந்தவொரு தகவலும் கிடைக்க வில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வாகன உதிரிப் பாகங்களை இரகசியமாக இறக்குமதி செய்து அவற்றைப் பயன்படுத்தி பி.எம். டபிள்யூ. கார் ஒன்றை தயாரித்துப் பயன்படுத்தியதாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குறித்த கார் பதிவு செய்யப்படவில்லை என்றும், அது போலி எண் மூலம் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தக் கார் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் வாகன தரிப்பிடத்தில் பல நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இரகசிய பொலிஸார் மூலம் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணம் 11 kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK 1300/= France, 2300/=, Germany 2100/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
TCN Express
321, K.K.S வீதி யாழ்ப்பாணம் 208, Galle Road, Colombo 06
T.P- 077 755 4528

காணி விற்பனைக்கு
1. கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 2 பரப்பும் 3.6 குழி காணி உடனடி விற்பனைக்கு உண்டு.
பிரதான காப்பெற் காணியிலிருந்து மூன்றாவது காணியாகவும் சிறந்த அயற் சூழலையும் கொண்டுள்ளது.
2. கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்துக்கு அருகாமையில் சுவாமியார் வீதியில் 2 பரப்பும் 36 குழி காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- சாய்ராம் 077 132 9682

TECHNO WORLD
A/L தொழில்நுட்பப்பிரிவு
A/L 2024 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுடைய
இலவசக் கருத்தரங்கு
26, 27 October 2024
தொழில் நுட்ப வியலுக்கான விஞ்ஞானம்
"காலை 8.00 மணிதொடக்கம் மதியம் 1.00 மணி வரை"
இடம் - வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
077 017 5346

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் உரும்பிராய் சிவகுல வீதியில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- உரும்பிராய் சந்தி 300 மீற்றர் தூரம்
- நல்ல சூழல் குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- தரகர் தேவையில்லை
- மருதனார் மடம் உரும்பிராய் செல்லும் காபற் வீதி 150 மீற்றர் தூரம்.
தொடர்புகளுக்கு:-
077 638 5683
076 755 8606
(CS/56501) J-1

## மரண அறிவித்தல்



**வல்லிபுரம் ஆறுமுகம்**

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், முகாந்திரம் வீதி மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஆறுமுகம் நேற்றுமுன்தினம் (19.10.2024) சனிக்கிழமை இறைவன் திருவடி சரணபுகுந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
076 536 7348
077 804 0692
076 587 1687

தகவல் : குடும்பத்தினர்

(CS/ 56502) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.